பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 05 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டில் போதுமான உரங்கள் கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

3. பருத்திக்கான இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் திரு. விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழகத்தில் ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வளரும் நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதில் பிரிக்ஸ் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

உலகளாவிய தென் பகுதி நாடுகளின் தேவைகள் தொடர்பாக குரல் கொடுப்பதற்கும் பிரிக்ஸ் கூட்டமைப்பு முக்கிய தலமாக விளங்குகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் பிரிக்ஸ் நாடுகள் இணைந்து பணியாற்றும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் போதுமான உரங்கள் கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்த வேண்டுகோள்களை செயல்படுத்துவது குறித்து புதுதில்லியில் வேளாண்துறை அதிகாரிகளுடன் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

அதிகாரிகள் தேவையற்ற வெளிநாட்டுப் பயணங்களை தவிர்க்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பணித்திறன் பாதிக்கப்படாமல் வீட்டில் இருந்தே பணி செய்யும் நடைமுறைகளை பின்பற்றலாம் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

உரங்கள் போதுமான அளவு கையிருப்பில் இருந்தாலும் ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

சமச்சீர் உரப் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நாடு முழுவதும், வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் சார்பில் ஆயிரத்து 657 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் தற்போது **8** லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் **18** லட்சம் விவசாயிகள் இயற்கை வேளாண் நடைமுறைகப் பின்பற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் மொத்த வேளாண் நிலப்பரப்பில் குறைந்தது **25** சதவீதமாவது இயற்கை வேளாண் நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

<<<<>>>>

பருத்திக்கான இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் எழுதியுள்ள கடிதத்தில், நாட்டில் மிகப்பெரிய ஜவுளி மற்றும் ஏற்றுமதி மாநிலமாக தமிழகம் திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பருத்தியின் விலை கடந்த **2** மாதங்களில் **25** சதவீதம் உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இறக்குமதியின் மூலமாக மட்டுமே மூலப்பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

இத்தகைய சூழலில் பருத்தி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள 11 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும் என்று திரு. ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மகளிர் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழக அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு 717 டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாற்றுப்பணி வழங்கப்படும் என்றும் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

<<<<>>>>

சனாதனம் தொடர்பான அவதூறு பேச்சுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், முன்பு இதுபோல் பேசியவர்களை மக்கள் ஆட்சியை விட்டு அகற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது தவெக-வின் சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் இதுபோன்ற கருத்துகளை கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற கருத்துகளை தொடக்கத்திலேயே தடுக்க வேண்டியது அவசியம் என்று திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், யாரும் கோவிலுக்குப் போகக் கூடாது என்ற நோக்கத்தில் சனாதனம் குறித்து தாம் பேசவில்லை என்றும், அனைவருக்கும் சம உரிமை வேண்டும் என்ற கருத்திலேயே பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டம் பூண்டிமாதா பேராலய தேர் பவனி நேற்றிரவு நடைபெற்றது.

இதில் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று பிரார்த்தனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte — Nandhagopal — 42 Sec)

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோவை, நீலகிரி, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 7 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

நகரில் அதிகபட்ச வெப்பநிலை **35** டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை **29** டிகிரி செல்சியசை ஒட்டியும் பதிவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளின் பல்வேறு இடங்களில் நேற்றிரவு லேசான மழை பெய்தது.

தென்காசி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்றிவு பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Senthil — 50 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 7 பேர் உயிரிழந்ததாக யுக்ரைன் கூறியுள்ளது.

-------------

அரிவாள் செல் ரத்தசோகை நோயை ஒழிப்பது குறித்து மத்திய பழங்குடியினர் நல அமைச்சகத்தின் சார்பில் புதுதில்லியில் பயிலரங்கம் நடைபெற்றது.

-------------

செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் நலத்திட்டங்களை செயல்படுத்துவது குறித்து சிறுபான்மையினர் நல அமைச்சகத்தின் சார்பில் புதுதில்லியில் நேற்று தேசிய மாநாடு நடைபெற்றது.

-------------

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து தருமபுரியில் மாவட்ட ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில் அரசு அலுவலர்கள் பங்கேற்ற பயிலரங்கம் நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா ஆய்வு செய்தார்.

-------------

மருத்துவ-தொழில்நுட்ப ஜவுளிப் பொருட்களின் தரநிலைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி, தர நிர்ணய அமைப்பின் சார்பில் கோவையில் நடைபெற்றது.

-------------

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஸ்ரீவைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் திருத்தேர் வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது.

-------------

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்று, அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களித்தது தொடர்பாக 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 200 ரன் எடுத்தது.

**201 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 19 புள்ளி 5 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்து வெற்றி பெற்றது.**

**இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி லக்னோ அணியை எதிர்கொள்கிறது.**

**லக்னோவில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**-------------**

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் முகமதன் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.**

**கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**